**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாள், வியாழக்கிழமை

**<u>இ.ம.எண். 3/2025 இன் அ.வ.எண்.54/2024</u>**

**<u>CNR No. TNSA13-000099-2024</u>**

1. பூபாலன்
2. விஜயகுமார்
3. மைனர்.பார்த்திபன்
   rep by his natural guardian mother and N/F சாந்தி
4. மணிகண்டன் . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாணிக்கம்
2. தியாகராஜன் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. மாவட்ட ஆட்சியர், சேலம்
4. வருவாய் கோட்டாட்சியர், ஆத்தூர்
5. வட்டாட்சியர், கெங்கவல்லி
6. கிராம நிர்வாக அலுவலர்,
   பச்சமலை . . . எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கு தரப்பினர்கள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 21.11.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ரவி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்குதரப்பினர்கள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு தாவாவில் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்குதரப்பினர்களை 3 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்த்து தாவாவை திருத்த அனுமதி அளிக்குமாறு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் வழக்கில் 1ம் வாதி என்றும், 2 முதல் 4 மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் தாக்கல் செய்வதாகவும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தானது சர்வே எண்.1459 ல் 0.77.50 ஹெக்டேர் பரப்பளவில் விவசாய நிலமானது பச்சமலை கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா சொத்தானது வாதிகளின் மூதாதையர் சொத்து எனவும், மனுதாரர்கள்/வாதிகளின் தாத்தாவான இராமசாமி என்பவர் யாருடைய இடைஞ்சலுமின்றி தாவா சொத்தை அனுபவித்து வந்ததாகவும், இராமசாமி இறந்த பின்னிட்டு அவருடைய நான்கு மகன்களான பெருமாள், லட்சுமணன், சோலைமுத்து மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர் தாவா சொத்துக்களில் பயிரிட்டு அனுபவம் செய்து வந்ததாகவும், பின்னிட்டு அவர்களது மகன்களான மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாவா சொத்தின் நீண்ட கால அனுபோகத்தின் அடிப்படையில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக வருவாய் துறையினரால் பட்டா எண்.1431 வழங்கப்பட்டுள்ளதாகவும், பின்னிட்டு சிட்டா, அடங்கல் ஆகியவை மனுதாரர்கள்/வாதிகள் பெயரில் மாற்றப்பட்டு அதற்குண்டான தீர்வைகளை அரசுக்கு செலுத்தி வருவதாகவும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் அமைந்துள்ள நிலங்களின் உரிமையாளர்கள் என்றும், அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில்

எதிர்நோக்கு தரப்பினர்கள் வாதிகளின் பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்ய முயற்சி செய்ததாகவும், எனவே அவர்களை வழக்கில் 3 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்க்க உத்திரவு பிறப்பிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

2ம் பிரதிவாதி தனது பதிலுரையையே இம்மனுவின் எதிருரையாக ஏற்க வேண்டி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தானது 2ம் பிரதிவாதியின் தந்தையான திருமலை மகன் பெருமாள் என்பவருக்கு பழைய பட்டா எண்.227, பழைய சர்வே எண்.1/1ல் புஞ்சை ஏக்.1.94 செண்ட் நிலம் பட்டாபடி பாத்தியப்பட்டு எவ்வித இடையூறும் இல்லாமல் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் திருமலை மகன் பெருமாள் பெயரில் வருவாய் துறைக்கு நிலவரி கட்டணம் மற்றும் சொத்து வரிகளை செலுத்தி வருவதாகவும், 2ம் பிரதிவாதியின் தந்தை பெருமாள் 21.03.1993 அன்று இறந்த பின்னிட்டு அவரின் வாரிசுகளான 2ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களான குணசேகரன், சுப்ரமணி, சகோதரிகள் வள்ளியம்மை, சகுந்தலா, விஜயா ஆகிய 6 நபர்களின் பெயர்களில் கூட்டாக தாவா சொத்து பொறுத்து பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாவா சொத்தை 2ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் மற்றும் சகோதரிகள் அனுபவம் செய்து வந்த நிலையில் 2ம் பிரதிவாதியால் தாவா சொத்தில் வெட்டப்பட்ட கிணற்றிற்கு இலவச விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு துணை வட்டாட்சியரால் சான்றொப்பமிட்டு சிட்டா, அடங்கல், உரிமை சான்று, வழங்கப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்திற்கு 2ம் பிரதிவாதியின் பெயரில் வரி செலுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்டி அவரும், அவரது குடும்பத்தாரும் அனுபவித்து வருவதாகவும், மேலும் கடந்த 30.08.2017 அன்று 2ம் பிரதிவாதி தாவா சொத்தை ஆதாரமாக வைத்து திருச்சி மாவட்டம், உறையூரில் வசித்து வரும் ஒரு மாணிக்கம் என்பவரிடம் ரூ.2,00,000/–

கடன் பெற்றுள்ளதாகவும், அதற்காக பதிவு செய்யப்பட்ட ஆதார கடன் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், இந்நிலையில் பச்சமலை பகுதிக்கு கடந்த 2022ம் ஆண்டு கணினி பதிவேடு ஆவணங்கள் தயார் செய்து வழங்கப்பட்ட போது தாவா சொத்தின் வருவாய் கணினி ஆவணங்களில் 2ம் பிரதிவாதியின் பெயரும், அவரது குடும்பத்தார் பெயரும் பதிவாகாமல் விடுபட்டு விட்டதை தெரிந்து கொண்ட வாதிகள் வருவாய் துறையினருடன் கூட்டு சேர்ந்து வாதிகளின் பெயர்களில் பெயர் மாற்றம் செய்து போலியாக ஆவணங்களை தயார் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து கணினி சிட்டா பதிவேடுகளில் தவறுதலாக பதிவாகியுள்ள பெயர்களை நீக்கி 2ம் பிரதிவாதியின் பெயரை கணினி சிட்டாவில் சேர்க்கும்படி கெங்கவல்லி வட்டாட்சியரிடம் கடந்த 09.09.2024ம் தேதியில் மனு கொடுத்ததாகவும், இதனை அறிந்த வாதிகள் தாவா சொத்தின் வருவாய் கணினி ஆவணங்களிலிருந்து அவர்களின் பெயர்களை நீக்கி விடுவார்கள் என்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி, 2ம் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுவையும் வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில் தாவா சொத்தானது வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்திற்கான பட்டாவானது வாதிகளின் பெயரில் பதிவாகி உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அது போலியான ஆவணம் என்றும், தாவா சொத்தின் பட்டா, சிட்டா ஆகியவை தங்களுடைய பெயர்களில் உள்ளதாகவும், தாவா சொத்தில் 2ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் அனுபவம் செய்து வருவதாகவும் கூறி பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவானது எதிர்நோக்கு தரப்பினர்களால் ரத்து செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறி அவர்களை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்நோக்கு தரப்பினர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்ப்பது குறித்து எவ்வித குறிப்பான ஆட்சேபனையும், பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுவில் கூறப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கு தரப்பினர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு நடத்தப்பட்டால் தான் வழக்கின் உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் இம்மனு இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.18 18:01:56 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

    இல்லை

2. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

    இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.12.18 18:02:04 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 3/2025 இன்
அ.வ.எண்.54/2024
நாள் : 18.12.2025